கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 82/2024

வாதி தரப்பு சாட்சி –1 வடிவேல் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 06.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எத்தனை ஏக்கர் விவசாய நிலங்கள் வைத்துள்ளேன் என்றால் சுமார் 4 முதல் 5 ஏக்கர் நிலம் இருக்கும். மானாவாரியா அல்லது நன்செய் நிலமா என்றால் நன்செய் சாகுபடி செய்கிறேன். கிணற்று பாசனா அல்லது வாய்க்கால் பாசனமா என்றால் கிணற்று பாசனம் ஆகும். மின் மோட்டார் வைத்துள்ளேனா என்றால் 5 எச்.பி மின் மோட்டார் வைத்துள்ளேன். மேற்படி மின் மோட்டாரின் சர்வீஸ் எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மின் மோட்டாரின் மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை சடைய கவுண்டர் பெயரில் உள்ளது.

2. மேற்படி மின் இணைப்பு சடைய கவுண்டர் பெயரில் உள்ள உள்ளதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு பத்திரம் உள்ளது என்றால் இல்லை. சடைய கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான் ஒருவர் மட்டுமே வாரிசு ஆகும். எனது தந்தை தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. எப்போது இறந்தார் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்தார். எனது தாயார் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். அவர் பெயர் காளியம்மாள் ஆகும். எனது பாட்டனார் பெயர் என்ன என்றால் கருப்ப கவுண்டர் ஆகும்.

3. கருப்ப கவுண்டரின் தந்தை பெயர் தெரியுமா என்றால் ராமா கவுண்டர் ஆகும். எனது பாட்டா கருப்ப கவுண்டருக்கு எத்தனை வாரிசு என்றால் எனது தந்தை ஒருவர் மட்டுமே வாரிசு ஆகும். கருப்ப கவுண்டருக்கு எனது தந்தை மட்டுமே வாரிசு என்பதை காண்பிக்கவும், எனது தந்தைக்கு நான் ஒருவர் மட்டுமே வாரிசு என்பதை காண்பிக்கவும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விவசாயம் செய்யும் நிலங்கள்

அனைத்தும் பூர்வீக சொத்து என்றால் மின் இணைப்பு வசதி அமைந்துள்ள சொத்து எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்துக்களாகும். மீதமுள்ள சொத்துக்கள் எனது பாட்டாவின் சொத்துக்களாகும்.

4. மேற்படி சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்களில் அமைந்துள்ளது என்றால் தெரியாது. பொதுவாக, ஒரு சொத்து ஒருவருக்கு சொந்தமாகி சாகுபடி செய்தால், அவரின் பெயரில் பட்டா, சாகுபடி அடங்கல் மற்றும் தீர்வை இரசீது ஆகியவை ஏற்படும் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீரனம் என்ன என்றால் 2 ¾ ஏக்கர் ஆகும். நான் இவ்வழக்கை கூட்டு குடும்ப மேலாளர் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள நிலையில், யார் யாருக்காகவும் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பெரியம்மா மற்றும் எனது பெரியம்மாவின் மகள்களுக்காகவும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளேன்.

5. எனது பெரியம்மா பார்வதி என்பவர் எனது தந்தையின் சகோதரரின் மனைவியா என்றால் இல்லை. அவர் எனது தந்தையின் முதல் மனைவி ஆகும். எனது தாயார் எனது தந்தையின் இரண்டாம் மனைவி ஆவார். எனது தந்தையின் முதல் மனைவியாகிய பார்வதி தற்போது உயிருடன் இல்லை. பார்வதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு மகள்கள் அதில் ஒருவர் இறந்து விட்டார். இறந்து போன பார்வதியின் ஒரு மகளுக்கு வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**